# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயம் (திருத்தம்)

**2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் அவர்களால்
2025 செத்தெம்பர் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

(2025 செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

**[34 ஆம் சட்டமூலம்]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 101.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இலங்கையில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் ஆட்களுக்கான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்புடைமையை மட்டுப்படுத்துவதற்தகானதுமாகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம், நாட்டின் சட்டங்களின்கீழான தவறுகள் என்றவாறாக ஏற்றங்கீகரிக்கப் பட்டு தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட முறைகள் தொடர்பிலான செயல் களையும் முதன்மைச் சட்டவாக்கத்திலிருந்தான அத்தகைய தவறுகளை விசாரணை செய்வதற்கான மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தையும் தடுப்பதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்தை (3 ஆம் மற்றும் 4 ஆம் பிரிவுகள்) நீக்குக்கிறது.

***வாசகம் 4 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அவ்விதிகளில் எடுத்துக் கூறப்படவேண்டிய விளையாட்டு வீரரொருவருக்கு நோய் தீர்க்கும் பாவனைக்கு விலக்களிப்பொன்றை (ரியுஇ) வழங்கு வதற்கான நிபந்தனைகளை இயலச் செய்வதற்கானதுமாகும்.

***வாசகம் 5 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ரியுஇ குழுவினால் ரியுஇ ஒன்றை வழங்குவதற்கான விண்ணப்பமொன்றை கவனத்திற்கொள்வதற்குமான நடவடிக்கைமுறைமை ஏற்பாடு செய்வதற்கானதுமாகும்.

***வாசகம் 6 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது விளையாட்டு வீரர்களுக்கு ரியுஇ குழுவின் முடிபை தெரிவிப்பதற்கு முகவராண்மைக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கானதுமாகும்.

***வாசகம் 7 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது எச்சூழ்நிலைகளில் இச்சட்டத்தின்கீழ் ரியுஇ ஒன்றை வழங்குவது ஏற்புடையற்பால அச்சூழ்நிலைகளை எடுத்துக் கூறுவதற்கானதுமாகும்.

***வாசகம் 8 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் சிங்கள உரையிலுள்ளதான வழுவை சரிசெய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 9 :*** இவ்வாசகம், ஏலவேயுள்ள ஏற்பாடுகளின் அதிக தெளிவுக்காக முதன்மைச் சட்ட வாக்கத்திலுள்ள “பாகம் III அ” என்றவாறாக “ஆளுநர் சபையின் அமைப்பு” எனும் தலைப்பிடப்பட்ட புதிய தலைப்பொன்றை உட்புகுத்துகின்றது.

***வாசகம் 10 :*** இவ்வாகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன் (இதனகத்துப்பின்னர் “முகவராண்மை”எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை ஊக்கு பதார்த்த எதிர்ப்பு முகவராண்மையின் அலுவல்களை மேற்பார்வை செய்வதற்கு (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளுநர்கள் சபைக்கான ஏற்பாடுகளை ஆக்குவதற்கானதுமாகும்.

***வாசகம் 11 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சபையின் அமைப்பை மாற்று வதற்கானதுமாகும்.

***வாசகம் 12 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை நீக்குகின்றது.

***வாசகம் 13 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை நீக்குகின்றது.

***வாசகம் 14 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கு, சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களை இயலச்செய்வதற்குமான ஏற்பாடுகளை ஆக்குவதற்கானதுமாகும்.

***வாசகம் 15*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண்ணை குறைப்பதற்கானதுமாகும்.

***வாசகம் 16 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை நீக்குகின்றது.

***வாசகம் 17 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை நீக்குகின்றது.

***வாசகம் 18 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன் முகவராண்மையின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கும் போது, கவனத்திற்கொள்ளப்படவேண்டிய நிபுணத்துவ துறைகளை விரிவுபடுத்துவதற்கானதாகும்.

***வாசகம் 19 :*** இவ்வாசகம், ஏலவேயுள்ள ஏற்பாடுகளின் அதிக தெளிவுக்காக முதன்மைச் சட்டவாக்கத்தில் “பாகம் III ஆ” “ஊக்குபதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான விதி மீறல்கள் பற்றிய கேட்புக்களை நடாத்துவதற்கான குழுக்களையும் குழாம்களையும் தாபித்தல்” என்ற புதிய தலைப்பினை உட்புகுத்துகின்றது.

***வாசகம் 20 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஒழுக்காற்று குழுமத்தின் அமைப்பை ஏற்பாடு செய்வதற்கானதுமாகும்.

***வாசகம் 21 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் பாகத்தை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் (24, 25, 26, 26அ, 26ஆ, 26இ, 26ஈ மற்றும் 27 ஆம் பிரிவுகள்) புதிய IV ஆம் பாகத்தின் சட்டப்பயன் பின்வருவனவற்றை ஏற்பாடுசெய்கின்றது :-

*(அ)* விளையாட்டு வீரரொருவருக்கு அல்லது வேறு ஆளுக்கு எதிராக ஊக்கு பதார்த்த பயன்பாட்டிற்கெதிரான நியமனம் மற்றும் விதி மீறலை உறுதிப்படுத்துவதற்கும் ஒழுக்காற்று குழாத்தினால் விசாரணையை நடாத்துவதற்கும் ஏற்புடையற்பாலான நடவடிக்கைமுறைகளை ;

*(ஆ)* மேன்முறையீட்டு குழாமொன்றின் நியமனம் மற்றும் மேன்முறையீட்டு குழாத்தினால் மேன்முறையீடுகளை விசாரித்தல் ;

*(இ)* விளையாட்டுக்கான நடுத்தீர்ப்பளிப்பு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடுகளை முன்வைத்தல்; அத்துடன்

(ஈ) மேன்முறையீட்டுக் குழாத்தினால் எதிரிடையான முடிவின் விளைவுகள்.

***வாசகம் 22 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் பெறும்போது, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் முன்னரான எழுத்துமூல அங்கீகாரத்தை பெறுவதற்கு முகவராண்மையை தேவைப்படுத்துவதற்கானதுமாகும்.

***வாசகம் 23 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ மற்றும் 31ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது என்பதுடன் இச்சட்டமூலத்தின் 16 ஆம் மற்றும் 17 ஆம் வாசகங்களினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் மற்றும் 20 ஆம் பிரிவுகளை நீக்குவதற்கான விளைவாந்தன்மையானதுமாகும்.

***வாசகம் 24 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஊக்கு பதார்த்த பயன்பாட்டிற்கெதிரான உலகக் கோவையின் ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான விதிகளை ஆக்குவதற்கு முகவராண்மையை தேவைப்படுத்துவதற்கானதுமாகும்.

***வாசகம் 25 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவை திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஆக்கப்படுகின்ற ஏதேனும் ஒழுங்குவிதி வர்த்தமானியில் அதன் வெளியீட்டிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவருவதற்கு அமைச்சரை தேவைப்படுத்துவதற்கானதுமாகும்.

***வாசகம் 26 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திலுள்ள சொல்லமைப்புகளுக்கான குறித்த சில புதிய வரை விலக்கணங்களை உட்புகுத்துவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவை திருத்துகின்றது.

***வாசகம் 27 :*** இவ்வாசகம், எத்தேதியில் இச்சட்டமூலம் பாராளுமன்றத்தின் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று கொழும்பிலுள்ள இலங்கை மேல் நீதிமன்றமும், கொழும்பிலுள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றமும் அதன் முன்னுள்ள எல்லா வழக்கு நடவடிக்கைகளையும் தொடர்ந்து விசாரித்து முடிவுறுத்துவதற்கான முன்னர் நிலைபெயர்கால ஏற்பாடுகளை ஆக்குகின்றது என்பதுடன் இச்சட்டமூலத்தின் 3 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் (3 ஆம் மற்றும் 4 ஆம் பிரிவுகள்) I ஆம் பாகத்தினை நீக்குவதற்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

## விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயம் (திருத்தம்)

ச.வ.-ஓ. 9/2025

## 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இச்சட்டத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "இலங்கையில் அல்லது வெளிநாட்டில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கையில்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I ஐ நீக்குதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I இத்தால் நீக்கப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) (இச்சட்டத்தில் "ரியுஇ" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நோய்தீர்க்கும் பயன்

பாட்டிற்கான விலக்களிப்பொன்று, விதிகளில் எடுத்துக்கூறப்பட்ட நிலைமைகளைத் திருப்திப் படுத்தினால் மாத்திரம், ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றும் போது, மருத்துவ நிலைமையொன்றுக்கு உட்பட்ட விளையாட்டு வீரரொருவரினால் தடைசெய்யப்பட்ட பதார்த்த மொன்றின் அல்லது தடை செய்யப்பட்ட முறை யொன்றின் பயன்பாட்டை அனுமதித்து விளையாட்டு வீரருக்கு வழங்கப்படலாம்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "முன்னரான முப்பது நாட்களுக்கு குறையாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முன்னரான சாத்திய மானளவுக்கு விரைவாகவும் அத்துடன் போட்டி களில் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களுக்கென மட்டும் முப்பது நாட்களுக்குக் குறையாமலும்" என்னும் சொற்களையும் "அனுப்புதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அனுப்புதல் வேண்டும்." என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2), (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(2)(அ) ரியுஇ குழுவானது பிணி ஆய்வு, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மருத்துவத்தில் அனுபவம்கொண்ட ஆட்களாக இருக்கவேண்டிய மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோரைக் கொண்டிருத்தல் வேண்டும். சொல்லப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர் சுகாதாரம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினது அமைச்சின் விளையாட்டு மருத்துவத்திலுள்ள ஆலோசகரின் பிரதிநிதி யொருவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) உறுப்பினர்கள், தாம் நியமிக்கப்படும் நேரத்தில் உளதாயிருக்கக்கூடிய ஏதேனும் அக்கறை முரண்பாட்டை வெளியிடுதல் வேண்டும். அதன்மேல், 10 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான இலங்கை முகவராண்மையானது அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு வேறோர் ஆளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் மீளாய்வுக்கான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், ரியுஇ குழுவானது ரியுஇ இனை ஆதரிக்கின்றதான சான்றுகள் மற்றும் ஆவணங்களுடன் சேர்த்து அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட் கொண்டு விளையாட்டு வீரரினால் கோரப்பட்ட ரியுஇ இனை ஒன்றில் வழங்குவதா அன்றில் மறுப்பதா என்பது பற்றிய முடிபொன்றை எடுத்தல் வேண்டும்.

(4) முடிபொன்றுக்கு வருகையில், ரியுஇ குழுவானது, விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்திலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(5) ரியுஇ குழுவானது அத்தகைய முடிபுக்கான காரணங்களைக் குறித்தளித்து அதன் முடிபை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மைக்கு அறிவித்தல் வேண்டும்.".

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்

"ரியுஇ இயைபான நிபந்தனைகளை எடுத்துக் கூறுதல்.

7. (1) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கெதிரான இலங்கை முகவராண்மையானது ரியுஇ குழுவின் முடிபை விளையாட்டு வீரருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) ரியுஇ ஆனது எந்த தடை செய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்ட முறை தொடர்பில் ரியுஇ அளிக்கப்படுகின்றதோ, அந்த தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தையும் அல்லது தடைசெய்யப்பட்ட முறையையும் அவ்வாறு அளிக்கப்பட்ட அத்தகைய விலக்களிப்பின் காலப்பகுதியையும் வேறு எவையேனும் நிபந்தனைகளையும் சேர்த்து தெளிவாக எடுத்துக் கூறுதல் வேண்டும்.

(3) ஆறாம் பிரிவின்கீழ் ரியுஇ குழுவின் முடிபினால் இன்னலுற்ற எவரேனுமாள் 26 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மேன்முறையீட்டுக் குழாத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"ரியுஇ ஒன்றின் செல்லுபடியாகுந் தன்மை.

8. இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அளிக்கப்பட்ட ரியுஇ ஒன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்புடையதாதலாகாது –

(அ) எந்தத் தேவைப்பாடுகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைய ரியுஇ அளிக்கப்பட்டுள்ளதோ அந்தத் தேவைப் பாடுகளுக்கு அல்லது நிபந்தனை களுக்கு விளையாட்டுவீரர் இணங்கியொழுகாதவிடத்து;

(ஆ) எந்தக் காலப்பகுதிக்கு ரியுஇ அளிக்கப் பட்டதோ அந்தக் காலப்பகுதி முடிவமைந்துள்ளவிடத்து; அல்லது

(இ) ரியுஇ குழுவின் முடிபானது விதிகளுக் கேற்ப நேர்மாறாக்கப்படுகின்றவிடத்து.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) எனும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(ஆ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறல்களுக்கு எதிராக வழிமுறைகளை மேற்கொள்ளுதல்;”.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு புதியதொரு தலையங்கத்தை உட்புகுத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவுக்கு நேர்மேலாக பின்வரும் புதிய தலையங்கம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது:-

**“பாகம் IIIஅ**

**ஆளுநர்கள் சபையின் அமைப்பு”.**

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

“(1) முகவராண்மையின் அலுவல்களின் மேற்பார்வையானது (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளுநர்கள் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.”;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "நிர்வகிக்கும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "மேற்பார்வை செய்யும்" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

"முகவராண்மையின் மேற்பார்வை சபைக்கு உரித் தாக்கப்படுதல்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கி விட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(1) சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது –

(i) விளையாட்டுக்கள் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச் சரினது அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலரொருவர்;

(ii) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்;

(iii) தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(iv) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சட்டத்துறைத் தலைமையதிபதியின் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதி மன்றாடியார் தலைமையதிபதி என்னும் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலரொருவர்; அத்துடன்

(v) நிதி அமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நிதி எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலரொருவர்; அத்துடன்

(ஆ) (இச்சட்டத்தில் “நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டம், மருத்துவம் அல்லது விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய துறைகளில் புகழ் பெற்றவர்களாகவும் குறைந்தபட்சம் பதினைந்து ஆண்டுகால அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களுமான, அமைச்சரால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) அமைச்சர், சபையின் பதவிவழி உறுப்பினர்களின் பெரும்பான்மை முடிபினது விதப்புரைமீது, நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட தவிசாளர் மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீளவும்

நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை நீக்குதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை நீக்குதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அமைச்சர், அவ்வாறு செய்தல் அவசிய மானதெனக் கருதினால்," எனும் சொற்களுக்குப் பதிலாக, "சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அவ்வாறு செய்தல் உசிதமானதென கருதினால்,சபையானது," எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "நான்கு" எனும் சொல்லுக்குப் பதிலாக "மூன்று" எனும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "அமைச்சரின் அங்கீகாரத்துடன்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "சபையின் உறுப்பினர்களின் பெரும்பான்மை யானோரின் அங்கீகாரத்துடன்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்விட்டு அதற்குப்பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக்

கொண்டுநடாத்துதல் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்து கின்ற விதிகள் ஆக்கப்படலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை நீக்குதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை நீக்குதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “மருத்துவம் அல்லது விளையாட்டு மருத்துவம்” எனும் சொற்களுக்குப் பதிலாக “மருத்துவம், சட்டம், விளையாட்டு நிருவாகம் அல்லது விளையாட்டு விஞ்ஞானம்” எனும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

“(2) பணிப்பாளர் தலைமையதிபதி, இச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்கவும் அவருக்குக் குறித்தளிக்கப் படக் கூடியவாறான அத்தகைய தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்திற் கான புதியதொரு தலையங்கத்தை உட்புகுத்துதல்

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவுக்கு நேர்மேலாக பின்வரும் புதிய தலையங்கம் இத்தால் உட்புகுத் தப்படுகின்றது:-

**“பாகம் III ஆ**

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகைகள் பற்றிய கேட்புக்களை நடாத்துவதற்கு குழுக்களையும் குழாம்களையும் தாபித்தல்”.**

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (உ) எனும் பந்தியில் “குழுவின் அல்லது குழாமின்” எனும் சொற்களுக்குப் பதிலாக, “பிரிவு 26 இன் கீழ் நியமிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறை யீட்டுக் குழாம் தவிர்ந்த, ஒரு குழுவின் அல்லது குழாமின்” எனும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஐ) எனும் பந்தியில், “விளையாட்டு வீரர்கள் அல்லது தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான குழுவின் ஆட்கள், சர்வதேச சம்மேளனம் மற்றும் தேசிய விளையாட்டுத்துறை சம்மேளனம் மற்றும் டபிள்யு எடிஏ” எனும் சொற்களுக்குப் பதிலாக “விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரருக்கான உதவி ஆளணியினர் முகவராண்மை, சர்வதேச சம்மேளனம், தேசிய விளை யாட்டுத்துறை சம்மேளனம் மற்றும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான உலக முகவராண்மை (டபிளியு ஏடிஏ) எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஒ) எனும் பந்தியில், “விளையாட்டு வீரர் அல்லது குழுவின்

உறுப்பினர் ஒருவர்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரருக்கான உதவி ஆளணியினர்" எனும் சொற்களையும் மற்றும் "விளையாட்டு வீரர் அல்லது தொடர்புடைய ஆள்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரருக்கான உதவி ஆளணியினர்" எனும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(ஈ) அவ்வுட்பிரிவின் (க) எனும் பந்தியில், "சம்பந்தப்பட்ட விளையாட்டு வீரருக்கு அல்லது ஆளுக்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக, "விளையாட்டு வீரருக்கு அல்லது விளையாட்டு வீரருக்கான உதவி ஆளணியினருக்கு" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(உ) அவ்வுட்பிரிவின் (ங) எனும் பந்தியில், "விளையாட்டு வீரருக்கு அல்லது ஆளின் குழுவின் உறுப்பினரொருவருக்கு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான தேசிய குழுமத்திற்கும், சர்வதேச சம்மேளனத்திற்கும், தேசிய விளையாட்டுக் கழகத்திற்கும் மற்றும் டபிள்யு எடிஏ இற்கும்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு, முகவராண்மைக்கு, சர்வதேச சம்மேளனத்துக்கு, தேசிய விளையாட்டுத்துறை சம்மேளனத்துக்கு மற்றும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான உலக முகவராண்மை (டபிளியு ஏடிஏ)" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2) சபையானது, உறுப்பினர்களின் கூட்டுக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்; அக் கூட்டுக்குழு, (இச்சட்டத்தில் "ஒழுக்காற்றுக் குழாம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை ஊக்கு பதார்த்தப்பயன்பாட்டிற் கெதிரான ஒழுக்காற்றுக் குழாம்" எனவழைக்கப் பட வேண்டிய முதல் நிலைக் கேட்புக் குழு வொன்றை அமைத்தல் வேண்டும். அத்தகைய கூட்டுக்குழுவானது பின் வருவோரைக் கொண் டிருத்தலும் வேண்டும் –

(அ) நீதிமன்றத் தோன்றுதல்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத் தைக் கொண்டுள்ள சட்டத்தரணிகளுக் கிடையே இருந்தான இரண்டு ஆட்கள்;

(ஆ) விளையாட்டு மருத்துவத் துறையில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள மருத்துவத் தொழிலர்களுக்கிடையே இருந்தான மூன்று ஆட்கள்; அத்துடன்

(இ) விளையாட்டு நிருவாகத்தில் முன்னனுப வத்தைக் கொண்டிருக்க வேண்டிய மூன்று ஆட்கள்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து அப்பிரிவின் (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவு களாகப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய உட் பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(3) அமைச்சர், (2) ஆம் உட்பிரிவில் குறித் துரைக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை ஒழுக்காற்றுக் குழாத்தின் தவிசாளராக நியமித் தல் வேண்டும்.

(4) தவிசாளர், ஒழுக்காற்றுக் குழாத்தின் ஏனைய உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும்; அது அவ்வொழுக்காற்றுக் குழாமின் தவிசாளருட்பட மூன்று உறுப்பினர்களை விஞ்சுதலாகாது.

(5) சபையானது, நிதி எனும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அச்சபை யினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தை அல்லது படியை ஒழுக் காற்றுக் குழாமின் தவிசாளருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் செலுத்தலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV ஐ மாற்றீடு செய்தல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பாகம் இடப் படுகின்து :-

"பாகம் IV

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறல்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைமுறையும் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறையும்**

ஊக்கு பதார்த்தப் பயன்பாட் டுக்கு எதிரான விதிமீறல் ஒன்றின் நிலைமை.

24. விதிகளின்கீழ் தாபிக்கப்பட்ட நீதித் தீர்ப்பளிப்புக்கு முன்னரான நடவடிக்கைமுறை களை பூர்த்திசெய்வதன்மேல், முகவராண்மை யானது சான்றுசார் தகவல்களின் அடிப்படை யில் திருப்தியுறுவதன்மீது, விளையாட்டு வீரரொருவர் அல்லது விதிகளில் தரப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறலொன்றைப் புரிந்துள்ளவரான வேறு ஆள் உறுதிப்படுத்தலாம்.

ஊக்கு பதார்த்த பயன்பாட் டுக்கு எதிரான விதியின் மீறுகையை முகவராண்மை உறுதிப்படுத் தின், எடுக்கப் பட வேண்டிய நடவடிக் கைகள்.

25. (1) முகவராண்மை இயையான விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு 24 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் உறுதிப்படுத்துகையை எழுத்தில் அறிவித்தல் வேண்டும். முகவராண்மையானது ஏற்புடைய தாகவுள்ளபோது, அந்தந்த வெளிநாட்டு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான குழு, சர்வதேச சம்மேளனம், தேசிய விளையாட்டுத் துறை சம்மேளனம் மற்றும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மை (டபிளியு ஏ டி ஏ) என்பவற்றுக்கும் அறிவித்தல் வேண்டும்.

(2) முகவராண்மை அத்தகைய உறுதிப் படுத்துகை ஒன்றைச் செய்யுமிடத்தும் மற்றும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆளுக்கு விதிகளின்கீழ் கேட்பொன்றுக்கான உரிமையை விட்டுக்கொடுப்பதற்கு வழங்கப்பட்ட காலத்தினுள் அவ்வாறு விட்டுக்கொடுக்கா திருக்குமிடத்து, முகவராண்மை அது பற்றி 23 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழுக் காற்றுக் குழாமுக்கு அறிவித்து விதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக் கிணங்க கேட்பொன்று நடாத்தப்பட வேண்டு மெனக்கோருதல் வேண்டும்.

(3) முகவராண்மையானது தனக்குக் கிடைக் கக்கூடியவையாகவுள்ள ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறுகைக்கான இயைபான எல்லா ஆவணப்படுத்துகையையும் ஒழுக்காற்றுக் குழாமுக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) ஒழுக்காற்றுக் குழாம் எல்லா ஆவணங் களையும் சான்றுகளையும் கவனத்துட் கொண்டதன் பின்னர், முடிபை ஆக்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய முடிபை

முகவராண்மைக்கும் மற்றும் விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரருக்கான உதவி ஆளணியினருக்கும் அறிவித்தலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் உறுதிப்படுத்தப் பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறுகையைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப் பட்ட விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் 26 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மேன்முறையீட்டுக் குழாத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

மேன்முறையீட்டு குழாம் ஒன்றை நியமித்தல்.

26. (1) அமைச்சர், (இதனகத்துப்பின்னர் "மேன்முறையீட்டுக் குழாம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்தை அமைப்பதற்கென சட்டம் அல்லது மருத்துவம் ஆகிய துறைகளில் தம்மளவில் புகழ்பெற்றுள்ள ஆறு உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும். மேன்முறையீட்டுக் குழாம், அவசியமானவிடத்து, குறித்த கருமமொன்று தொடர்புபட்ட இயைபான துறையில் தேவைப்படுத்தப்படும் அறிவு மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள எவரேனும் ஆளை குழாமுக்கு உறுப்பினரொருவராக ஒத்துத் தேர்ந்தெடுப்பதற்கான சாத்தியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டுக் குழாம், விதிகளுக் கிணங்க அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டை கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.

ரியுஇ குழுவின் முடிபிலிருந் தான மேன் முறையீடுகள்.

26அ. ரியுஇ குழுவின் முடிபொன்றிலிருந் தான மேன்முறையீட்டுக் குழாத்துக்கான மேன்முறையீடொன்று விதிகள் மூலம் ஏற்பாடு

செய்யப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதி யினுள்ளும் அத்தகைய முறையிலும் செய்யப் படுதல் வேண்டும்.

தேசியமட்ட விளையாட்டு வீரரொருவர் அல்லது சர்வதேச மல்லாத நிகழ்வொன்று சம்பந்தப்படு கின்ற ஒழுக் காற்றுக் குழாமின் முடிபிலிருந் தான மேன்முறை யீடுகள்.

26ஆ. (1) பிரிவு 25 இன்கீழான ஒழுக்காற்றுக் குழாத்தின் முடிபொன்று சர்வதேசமட்ட விளை யாட்டு வீரரொருவரை அல்லது சர்வதேச நிகழ்வொன்றை சம்பந்தப்படுத்தாதவிடத்து, விதிகள்மூலம் குறித்துரைக்கப்பட்ட திறத்தவர்கள் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டுக் குழாத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) வேறு திறத்தவரெருவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒழுக்காற்றுக் குழாத்தின் முடிபொன்றுக்கு எதிராக மேன்முறையீடு செய்திராதுள்ளவிடத்து, ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மை (டபிள்யு ஏடிஏ) ஆனது அத்தகைய முடிபு தொடர்பில் மேன்முறையீட்டுக் குழாத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யாமல் விளையாட்டுக்கான நடுத்தீர்ப்பு நீதிமன்றத்துக்கு நேரடியாக மேன்முறையீடு செய்யலாம்.

(3)(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் மேன் முறையீட்டுக் குழாத்துக்கான மேன்முறை யீடொன்று விதிகளுக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) (டபிள்யூ ஏ டி ஏ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மை மூலமான மேன்முறையீட்டுக் குழாத்துக்கான மேன்முறையீடொன்று விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டும்.

*சர்வதேசமட்ட விளையாட்டு வீரரொருவர் அல்லது சர்வதேச நிகழ்வொன்று சம்பந்தப்படுகின்ற ஒழுக்காற்றுக் குழாமின் முடிபிலிருந்தான மேன்முறையீடுகள்.*

26இ. பிரிவு 25 இன்கீழான ஒழுக்காற்றுக் குழாத்தின் முடிபொன்று சர்வதேசமட்ட விளையாட்டு வீரரொருவருடன் அல்லது சர்வதேச நிகழ்வொன்றுடன் சம்மந்தப்படுகின்றவிடத்து, விதிகள்மூலம் குறித்துரைக்கப்பட்ட திறத்தவர்கள் அத்தகைய முடிபுக்கெதிராக விளையாட்டுக்கான நடுத்தீர்ப்பு நீதி மன்றத்துக்கு நேரடியாக மேன்முறையீடு செய்வதற்கான உரிமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*மேன்முறையீட்டுக் குழாத்தின் முடிபிலிருந்தான மேன்முறையீடுகள்.*

26ஈ. (1) மேன்முறையீட்டுக் குழாத்தின் முடிபுகள் 33 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு, சூழ்நிலைகள் தொடர்பிலும் ஊக்கு பதார்த்த பயன்பாட்டுக்கெதிரான உலக சட்டக் கோவை மற்றும் பெறுபேற்று முகாமைத்துவத்திற்கான சர்வதேச நியமங்கள் என்பவற்றினால் அனுமதிக்கப்பட்ட திறத்தவர்கள் மூலமும் விளையாட்டுக்கான நடுத்தீர்ப்பு நீதி மன்றத்துக்கு மட்டும் மேன்முறையீடு செய்தல் வேண்டும்.

(2) விளையாட்டுக்கான நடுத்தீர்ப்பு நீதி மன்றம் அவ்வாறு பணிப்பின், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் திறத்தவருக்கு இயைபான தகவல்களை வழங்குதல் முகவராண்மையின் கடமையாதல் வேண்டும்.".

*மேன்முறையீட்டுக் குழாத்தினால் எதிரிடையான முடிபொன்றின் விளைவுகள்*

27. எவரேனும் விளையாட்டு வீரர் விதிகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ளாரெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய விளையாட்டு வீரர் விதிகளின் ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகளின் நியதிகளின்படி தண்டிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) எனும் பந்தியில் "எல்லாப் பணத்தொகைகளும்," எனும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின் எவ்வாறாயினும், முகவராண்மை யானது எல்லா வெளிநாட்டு நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் தொடர்பில் வெளிநாட்டு மூல வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீ காரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ மற்றும் 31ஆ எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்ட வாக்கத்தின் 31அ மற்றும் 31ஆ எனும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"முகவராண்மை ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லைக் குள் அட்ட வணைப்படுத் தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல்.

**31அ.** முகவராண்மையானது 2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லையினுள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப் படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

முகவராண்மை யின் உறுப் பினர்கள், அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.

**31ஆ.** முகவராண்மையின் எல்லா உறுப் பினர்களும், அலுவலர்களும் மற்றும் வேறு ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லை யினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(1) முகவராண்மை, அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு உட்பட்டு, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக சட்டக் கோவையின் ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான விதிகளை ஆக்குதல் வேண்டும்.".

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "அறுபது நாட்களுக்குப் பிந்தாமல்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "தொண்ணூறு நாட்களுக்குப் பிந்தாமல்" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) "விளையாட்டு வீரர்" எனும் சொல்லமைப்பின் விரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

""விளையாட்டு வீரருக்கான உதவி ஆளணியினர்" என்பது, விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுகின்ற அல்லது அதற்காகத் தயாராகின்ற விளையாட்டு வீரரொருவரைக் பரிகரிப்புச் செய்கின்ற அல்லது அவருக்கு உதவுகின்ற எவரேனும் பயிற்சி வழங்குநர், பயிற்றுநர், முகாமையாளர், முகவர், அணியின் பணியாட்டொகுதியினர், உத்தியோகத்தர், மருத்துவ அல்லது

துணைமருத்துவ ஆளணியினர், பெற்றார் அல்லது இணைந்து பணியாற்றும் வேறு எவரேனுமாள் எனப் பொருள்படும்;";

(2) "சி எ எஸ்" (CAS) எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலமும்;

(3) "கோவை" எனும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை நீக்கிவிடுவதன் மூலமும்;

(4) "போட்டி" என்னும் வரைவிலக்கனத்தினை உடனடுத்துப்பின்னர் பின்வரும் வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

""விளையாட்டுக்கான நடுத்தீர்ப்பு நீதிமன்றம்" என்பது, சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் தாபிக்கப்பட்ட விளையாட்டுக்கான நடுத் தீர்ப்பு நீதிமன்றம் எனப் பொருள்படும்;";

(5) "போட்டியின் போதான சோதனை" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக் கணங்களை இடுவதன் மூலமும்:-

""போட்டியின் போது" என்பது, விளையாட்டு வீரர் எந்தப் போட்டியொன்றில் பங்கு பற்றுவதற்குத் திட்டமிடுகின்றாரோ அந்தப் போட்டிக்கு முந்தைய நாளன்று பி.ப 11.59 மணியில் தொடங்கி அத்தகைய போட்டி முடிவடைகின்ற வரையிலான காலப்பகுதியொன்றும் மற்றும் அத்தகைய போட்டியுடன் தொடர்புபட்ட மாதிரி சேகரிப்புச் செயல்முறையொன்றும் எனப் பொருள்படும்;

"தகவல்" என்பது, தரவுகள், எழுத்துருக்கள், படவுருக்கள், ஒலி, குறியீடுகள், தரவுத் தளங்கள் அல்லது நுண்படம் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது;

"சர்வதேசமட்ட விளையாட்டு வீரர்" என்பது, சோதனையிடுதல் மற்றும் புலனாய்வுகளுக் கான சர்வதேச நியமங்களுக்கு இணங்கி ஒவ்வொரு சர்வதேச சம்மேளத்தினாலும் வரையறுத்துக் கூறப்பட்டவாறாக சர்வதேச மட்டத்திலான விளையாட்டில் போட்டியிடும் விளையாட்டு வீரரொருவர் எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது, இயற்கையான ஆள் அல்லது ஒழுங்கமைப்பொன்று அல்லது வேறு உருவகம் எனப் பொருள்படும்;";

(6) "விளையாட்டு ஒழுங்கமைப்பு" எனும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன் மூலமும்;

(7) "நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக் களிப்பு (ரியுஇ)" மற்றும் "பயன்பாடு" எனும் சொல்லமைப்புக்களின் வரைவிலக்கணங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக முறையே பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும்:-

"இச்சட்டத்தின் பாகம் II தொடர்பில், "நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்பு (ரியுஇ)" என்பது, 33 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் தரப்பட்டவாறாக, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலகச் சட்டக் கோவை மற்றும் நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக் களிப்புகளுக்கான சர்வதேச நியமம் என்பவற்றுக்கிணங்க மருத்துவ நிலைமை யொன்றிலுள்ள ஒரு விளையாட்டு வீரருக்கு அளிக்கப்பட்ட ஒரு விலக்களிப்பு எனப் பொருள்படும்;

"பயன்பாடு" என்பது, ஏதேனும் தடை செய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையை எத்தன்மையதுமான ஏதேனும் வழிமுறையில் பயன்படுத்துதல், பிரயோகித்தல், உட்கொள்ளுதல், ஊசிமூலம் ஏற்றுதல் அல்லது நுகர்தல் எனப் பொருள்படும்;"; அத்துடன்

(8) "ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மை (டப்ளியு ஏ டி எ)" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"" ஊக்குப் பதார்த்த பயன்பாட்டிற் கெதிரான உலக சட்டக் கோவை" என்பது கோபன் ஹேகன் நகரில், 2003, மாச்சு 5 ஆந் தேதி ஊக்கு பதார்த்தம் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மையினால் (டப்ளியு ஏ டி எ) ஏற்புச்செய்யப்பட்ட, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான, ஊக்கு பதார்த்தபயன்பாட்டிற்கெதிரான உலக சட்டக் கோவை எனப் பொருள்படும்.".

நிலை பெயர்கால ஏற்பாடுகள்

**27.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் நேர்முந்திய நாளன்று கொழும்பில் நடைபெறும் இலங்கை மேல் நீதிமன்றத்தில் அல்லது கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்திற்கென அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாண மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதும் அந்நீதிமன்றத்தின் முன்னர் முடிவுறாதுள்ளதுமான எல்லா துடர்ச்சிகளும், குற்றவழக்குகளும், வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும், கருமங்களும் அல்லது காரியங்களும் அத்தகைய

நீதிமன்றத்தினால் எச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப்பட்டுள்ளனவோ அச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கேட்கப்பட்டு முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.